பதிவு எண். M. 6331 ★ தொலைபேசி: 81331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 19] சென்னை: மார்கழி 15 (30—12—71) வியாழன் வெளியூர்: மார்கழி 16 (31—12—71) வெள்ளி [இதழ்: 165

பதுக்கல் வியாபாரிகள் 1,000 பேர் கைது

பம்பாய், டிச. 30—
பதுக்கல் – கொள்ளை இலாபம் – விலைப் பட்டியல்களைப் போடாதிருத்தல் ஆகிய குற்றங்களுக்காகப் போலீசார் இதுவரையில் சுமார் 1,000 வியாபாரிகளைக் கைது செய்திருக்கிறார்கள்.

இம்மாதிரி குற்றங்களுக்காக 860 வழக்குகட்குமேல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குடும்ப நலத் திட்டத்துக்கும் எதிர்ப்பு இயக்கமா?

தீவிர அரசியல்வாதிகளின் விருப்பத்தகாத செயல்

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி வேதனை --- நாட்டு மக்கட்கு வேண்டுகோள்

சென்னை, டிச. 31—
"குடும்ப நலத் திட்டத்துக்கும் எதிராகச் சில தீவிர அரசியல் வாதிகள் இயக்கம் நடத்தத் துவங்கியிருக்கின்றனர்.

"நாட்டின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தும் வகையில் விரைந்து வளர்ந்துவரும் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவே இந்தக் குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது; ஆனால் சிலர், வேண்டுமென்றே திட்டமிட்டு இதற்கு எதரான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

"குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்வதற்காகச் சென்று கொண்டிருந்த குடியானவர்களையும் கிராமத்து மக்களையும் அடித்து விரட்டியிருக்கின்றனர்; இந்தத் தகவல், நான், அணமையில் தஞ்சை சென்றிருந்தபோது கேள்வியுற்றேன்"

என்று முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மிகுந்த வேதனையோடு தெரிவிததார்.

நேற்று மாலை சென்னை—இராபின்சன் பூங்காத் திடலில் நடைபெற்ற குடும்ப நலத் திட்ட இரு வார விழாவின் நிறைவுச் சொற்பொழிவாற்றுகையிலேயே கலைஞர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மக்கட் தொகை, வரம்பின்றி வளர வேண்டுமென்பது இந்தத் தீவிரவாதிகளின் நோக்கமாகும்; ஏனெனில், வளர்ந்து வரும் மக்கட் தொகைக்கேற்ப வேலை வாய்ப்புக் கிட்டுவது சிரமமாகும்; அப்போது நாட்டில் குழப்ப நிலை உருவாகும்; அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தங்களது 'வெளிநாட்டு நண்பர்'களின் உதவியுடன் அவர்கள், தங்களது குறிக்கோளை இங்கு அடைந்துவிடலாம் என்று இந்தத் தீவிரவாதிகள் கருதுகிறார்கள்.

ஆனால் அதிருஷ்டவசமாக தமிழகத்தில் குடும்பக கட்டு பாடுத் திட்டம் நல்ல வெற்றியடைந்திருக்கிறது. இங்கு மக்களே அத்திட்டத்தினயனை அறிந்து ஒததுழைப்புத் தருகிறார்கள்."

இந்நிகழ்ச்சிக்கு மேயர் காமாட்சி செயராமன் தலைமைவகித்தார்; தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு. வேதாசலம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் சிறந்த முறையில் பணியாற்றிய டாக்டர்களுக்கும் -- ஊழியர்களுக்கும் முதலமைச்சர் பரிசுகள் வழங்கினார்.

அளவான குடும்பத்தின் அவசியத்தை எடுத்துக்காட்டிய அவர், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு சென்னை மாநகராட்சி எல்லா வசதிகளும் செய்து தருவதாகக் கூறினார்.

அமைச்சர்கள் ஓ. பி. இராமன், எஸ். இராமச்சந்திரன் ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசினர்.

நலத் துறைச் செயலாளர் ஜே ஏ. அம்பாசங்கர், தமிழகத்தில் மத்திய அரசு நிர்ணயித்த 1,76,000 அறுவை முறை இலக்கை ஏற்கனவே எட்டிவிட்டதாகத் தெரிவித்தார்.

எதிரிகள் வைத்த சுரங்கக் கண்ணிகள்

எல்லைப் பகுதியில் கண்டுபிடிப்பு

ஜெஸ்சூர், டிச. 30—
இந்தியாவின் எல்லையோரத்தில்-- பனபோல் பகுதியில், பாகிஸ்தான் துருப்புன் வைத்திருந்த 108 சுரங்கக் கண்ணிகளை இந்திய இராணுவத்தினர் கண்டுபிடித்து எடுததிருக்கிறார்கள்.

மேற்கு வங்காளத்தில் உள்ள பொங்கோன் என்ற இடத்துக்கும் -- ஜெஸ்சூருக்கும் இடையே இரயில் பாதை போடப்பட்டபோது இவை எடுக்கப்பட்டன.

ஜப்பான் கடன் மீண்டும் தொடர்ந்து கிடைக்கும்

டோக்கியோ, டிச. 29—
"இந்தியா -- பாகிஸ்தான் போரைத் தொடர்ந்து நிறுத்தப்பட்ட ஜப்பான் யென் கடனை மீண்டும் தொடங்குவது பற்றி இந்தியாவுடன் மீண்டும் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவது என்று ஜப்பான் அரசு முடிவு செய்திருக்கிறது"

என்று வெளிநாட்டுத் துறை வட்டாரங்கள் கூறின.

11 கோடி அமெரிக்க டாலர் (ரூ. 82.50 கோடி) மதிப்புக்குக் கடனை ஜப்பான் அளிக்கும் என்று இந்திய அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்திருப்பதாக அந்த வட்டாரங்கள் கூறின.

பண்டங்களாக -- அதாவது உருக்குச் சாதனங்களாகவும், இரசாயன உரமாகவும் இந்தக் கடன் அளிக்கப்படும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது.

வீரர் ஆறுமுகம் மனைவிக்கு பண முடிப்பு

வேலூர், டிச. 30—
திருப்பத்தூரில் நடைபெற்ற பொதுககூட்டம் ஒன்றில், வீர சக்கர விருது பெற்ற பீரங்கி வீரர் ஆறுமுகத்தின் மனைவி முனியம்மாளிடம் ரூ 1,500 பண முடிப்பு அளிக்கப்பட்டது.

பாதுகாப்பு நாளையொட்டி இந்தக் கூட்டம் நடைபெற்றது.

முனியம்மாள் தனது குழந்தை இந்திராவுடன் வந்து இந்தப் பண முடிப்பைப் பெற்றுக் கொண்டார்.

அமெரிக்காவின் மனித விரோதச் செயல்

வட வியட்நாமில் 80 மணி நேரம் பயங்கரக் குண்டுவீச்சு

200 வேட்டை --- வெடிகுண்டு விமானங்களால் ஏற்படும் சீரழிவுகள் பற்றி விளக்கம்

செய்கோன், டிச. 30—
"சீரழிவையும்-மனித உயிர்களுக்குப் பெரும் நாசத்தையும் விளைவிக்கக்கூடியதான 6,800 கிலோ எடையுள்ள பயங்கரக் குண்டுகளை அமெரிக்கப் போர் விமானங்கள், இப்போது வட வியட்நாம்மீது வீசி வருகின்றன.

'இந்தக் குண்டு விழ்ந்த இடத்தில் ஒரு மைல் சுற்றளவுக்குப் புல் பூண்டுகளோ--உயிரினங்களோ இருக்காது; அனைத்துமே அழிந்துவிடும்" என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதன் அழிவுத்தன்மைகளில் ஒன்று-- 'அதிர்ச்சி அலை'களை ஏற்படுத்துவதாகும்.

அமெரிக்க அதிபர் நிக்சனின் உத்தரவுப்படி, நான்காவது நாளாக நேற்று வட வியட்னாம் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுகளைப் போட்டன; அவற்றை வட வியட்னாம் மிக் விமானங்களும் -- பீரங்கிகளும் -- ஏவுகணைகளும் எதிர்த்தன; ஆனால் எதிர்ப்பு இலேசாக இருந்ததாக இராணுவ வட்டாரங்கள் கூறின.

நேற்று மாலை 4-மணிவரையில் மொத்தம் 80-மணி நேரம் குண்டு வீச்சு நடத்தப்பட்டது! 1970 மே திங்கள் நடந்த பெரிய விமானத் தாக்குதல் 60-மணி நேரமே நீடித்தது; இப்பொழுது அதற்குமேல் 20 நேரம் தாக்குதல் நடத்தியிருக்கிறது.

இந்தோ – சீனாவில் உள்ள 360 வேட்டை – வெடி குண்டு விமானங்களில் சுமார் 200 விமானங்கள் தாக்குதலில் கலந்துகொண்டதாக இராணுவ வட்டாரங்கள் கூறின.

இந்தியா கவலை

புதுடில்லி, டிச. 30—
வட வியட்னாம்மீது அமெரிக்கா பெரும் அளவில் குண்டு வீச்சைத் துவக்கியிருப்பதுபற்றி இந்திய அரசு ஆழ்ந்த கவலை தெரிவித்தது.

"குண்டு வீச்சு உடனடியாக நிறுத்தப்பட்டு, இந்தோ -- சீன பிரச்சினை, சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்படும் என்று நம்புகிறோம்" என்று கூறப்பட்டிருக்கிறது.

இப்பிரச்சினைபற்றி, வட வியட்னாம், இந்தியாவுடன் தொடர்புகொண்டிருக்கிறது.

இரு முனைகளைத் தாக்கும் 'இந்திரா ஏவுகணை'

பாகிஸ்தான் போரில் கிடைத்த 'புதிய ஆயுதம்'

பம்பாய், டிச. 30—
"இந்தியா – பாகிஸ்தான் போரில் வெளிவந்த புதிய ஆயுதம், 'இந்திரா ஏவுகணை'யாகும்.

'மற்ற ஏவுகணைகள், ஒரே திசையில்தான் தாக்கும்; ஆனால் புதிய ஏவுகணை இரு திசைகளிலும் தாக்கும் சக்தியை உடையதாக விளங்கியது.

"இந்தியாமீது பாகிஸ்தான் போர் தொடுத்ததும் பாகிஸ்தான் தாக்குதலைக் கிழக்கிலும் -- மேற்கிலும் முறியடிக்குமாறு இந்தியத் துருப்புக்களுக்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி உத்தரவிட்டார்; இந்த 'ஏவுகணை', இரு முனைகளிலும் பாகிஸ்தானைத் தோற்கடித்தது; வங்க தேசத்தை விடுவித்தது; ஜெனரல் யாகியா கானைப் பதவியிலிருந்து இறக்கியது."

---நிதியமைச்சர் சவான்

முதல்வரின் செயலாளர்

கே. இலட்சுமிகாந்தன் பாரதி நியமனம்

சென்னை, டிச. 30—
முதலமைச்சர் கருணாநிதி அவர்களின் அந்தரங்கச் செயலாளராக கே. இலட்சுமிகாந்தன் பாரதி நியமிக்கப்பட்டிருக்கிறார்; இதுவரையில் அவர் மதுரை மாவட்டக் கலெக்டராக இருந்துவந்தார்.

இதுவரையில் முதலமைச்சரின் அந்தரங்கச் செயலாளராகஇருந்து வந்த எம். வைத்திலிங்கம் அகதிகள் மறுவாழ்வுத்துறை இயக்குநராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு-- ஊக்குவித்தவர்கள் யார்?

"அமெரிக்க அரசு பாகிஸ்தான் இராணுவத்தினரின் அடக்குமுறைகளுக்கு ஊக்கமளித்தது! அரசியல் தீர்வின் அவசியத்தையும் – அகதிகள் திரும்புவதற்கு வழிகோலுவதன் அவசியத்தையும் அது அலட்சியம் செய்தது; பாதுகாப்புச் சபை விவாதத்தின்போது அமெரிக்கா கையாண்ட முறை, வங்க தேச மக்களுக்கு எதிரிடையாகவே உருவாயிற்று! மூலகாரணங்களை அகற்றித் தீர்வு காண்பதற்கு வழி செய்ய அது மறுத்துவிட்டது; கண்கூடான நிலைமைக்கு அது மதிப்பு கொடுத்து நடந்துகொண்டிருந்தால் போர் வராமல் தவிர்த்திருக்கலாம்"

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற போர் பற்றி, இரஷ்யாவின் ஏடான 'பிராவ்தா' இதழில், ஜியாகுபோவ் என்பவர் விரிவாக விமர்சனம் செய்து எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்; 'இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை ஊக்குவித்த நாடுகள் அமெரிக்காவும் -- சீனாவுமேயாகும்' என்று 'பிராவ்தா' ஏடு குறிப்பிட்டிருக்கிறது; இத்தொடர்பில் தரப்பட்டுள்ள விளக்கம் வருமாறு:—

போர் மூண்டதற்கான பொறுப்பில் பெரும் பகுதி சீனாவையே சாரும்; மக்களிடையே விரோதத்தை வளர்த்து -- சீன ஆதிக்கத்தை விரிவுபடுத்திக்கொள்வது பீகிங் தலைவர்களின் வழி; "பிற நாடுகளில் குறுக்கிடாமை -- அவற்றின் ஆதிக்க உரிமையை மதித்து நடந்துகொள்வது -- சமாதானத்துடன் கூடிய சகவாழ்வு' என்றெல்லாம் பேசிக்கொண்டு அதற்கு நேர்மாறாக நடந்துகொள்வது சீனாவின் வழியாகும்.

1959-ல் இமாலயப் பிரதேசத்தில், சீனாவுக்கும் --- இந்தியாவுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன; அது முதல், இந்தியாவுக்கு எதிரிடையான கொள்கையை சீனா பின்பற்றி வந்துள்ளது; வளர்ந்துவரும் நாடுகளின் [illegible] இந்தியாவை மட்டந்தட்டுவதையே நோக்கமாகக் கொண்டு [illegible]ல்லாவகைகளிலும் அது பாடுபட்டு வந்திருக்கிறது; இந்தி[illegible]வை இழிவுபடுத்திவிட்டால், வளரும் நாடுகளின் தலைமை தனக்குச் சுலபமாகக் கிட்டிவிடும் என்ற நினைப்பிலதான் இந்துஸ்தான் தீபகற்பத்தில் நிலைமையைச் சிக்கலாக்கி -- இந்தியாவைப் பலவீனப்படுத்துவதில் அது நாட்டம் கொண்டுள்ளது.

இதே நோக்கத்துடன்தான், அவ்வப்பொழுது எல்லைப்புறத்தில் தொல்லைகளை இந்தியாவுக்குச் சீனா கொடுத்து வந்திருக்கிறது; 1962-ல் சீனத் துருப்புகள் தாக்கியது; 1965-ல் இந்தியாவுக்கு இறுதி எச்சரிக்கையை அனுப்பி மிரட்டியது.

தீவிரவாதிகளின் வன்முறைகளை ஊக்குவித்து--இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் சீனா குறுக்கிட்டு வந்துள்ளது; இதன் மூலம், இந்தியாவின் வளர்ச்சிக்கு அது ஊறுவிளைவிக்கப் பார்க்கிறது.

இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கையை சீனா இடைவிடாது தாக்கி, ஆசிய--ஆப்பிரிக்க நாடுகளின் அவநம்பிக்கையை வளர்க்கப் பாடுபட்டுவந்துள்ளது; மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குமுன், பர்மா --- நேப்பாளம் -- இலங்கை ஆகியவற்றை நிர்ப்பந்தித்து, இந்தியாவுக்கு எதிரிடையாகப் போராட்டத்தில் முயன்றது' 'நேபாளத்தின் காவலன்' போல் நடித்து இந்தியாவுடன் அதன் நல்லுறவைச் சீர்குலைக்க முற்பட்டது.

வட பர்மா, சீன ஆதரவு கலக்காரர்கள் வசமிருக்கிறது; அவர்கள்மூலம் இந்தியாவின் வட பகுதி மாவட்டங்களில் பிரிவினை இயக்கத்தை சீனா ஊக்குவித்தது; இலங்கையிலும் இந்திய எதிர்ப்பு உணர்வை சீனர் வளர்த்தனர்; இந்தியாவைப் பகை நாடுகளால் சூழவைத்து அதைத் தனிமைப்படுத்துவதே சீனாவின் நோக்கமாகும்.

பர்மா--நேப்பாளம்--இலங்கை ஆகியவை சீனாவின் கருவிகளாகப் பயன்பட மறுத்துவிட்டன; எனவே, இந்தியாவுக்கு எதிரிடையான தனது போராட்டத்தில், பாகிஸ்தான் அதிபர் யாகியா கானை முழுக்க முழுக்க அது நம்பி வேலை செய்யலாயிற்று.

இந்தியா--பாகிஸ்தான் வேறுபாடுகள் தீருவதற்குத் துணை புரியாமல், ஒவ்வொரு பிரச்சினையிலும் இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தானுக்குத் தூபம் போட்டுத் தனது வலையில் அதை வலித்துக் கொண்டுவிட்டது!

இந்த நோக்கத்துடன்தான், இந்தியாவுடன் சீனாவுக்குள்ள எல்லை விவகாரங்களை அதன் தலைவர்கள் தீர்க்காமல் ஈரொட்டாக விட்டு வைத்தனர்!

இந்தியாவுக்கும்--பாகிஸ்தானுக்கும் இடையே உறவு முறையை இயல்பாக்கும் நோக்கத்துடன் 1966-ல் கையெழுத்தான தாஷ்கண்ட் உடன்பாட்டை பீகிங் கண்டித்தது; 'அமெரிக்காவு -- இரஷ்யாவும் சேர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக அதை உருவாக்கின' என்று அப்பொழுது பீகிங் குற்றஞ்சாட்டியது.

காஷ்மீர் சிக்கலை மேலும் வளர்ப்பதில் பீகிங் அக்கறை காட்டியது; அப்பிரச்சினை மீது பாகிஸ்தான் ஜெனரல்களுக்கு அது ஆதரவை வாக்களித்தது; 1969 ஜூலையில் ஏர் மார்ஷல் நூர்கான் பீகிங்குக்குச் சென்றபோது இந்த உறுதி அளிக்கப்பட்டது; 1970 பிப்ரவரியில் பாகிஸ்தானுக்கு வந்த கோமோ-ஜே', இதை உறுதிப்படுத்தினர்; 1970 நவம்பரில் யாகியா கானுக்கு மேலும் உறுதிமொழிகள் தரப்பட்டன; அவசியமாயின் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள தனது ஆதரவாளரைப் பயன்படுத்திக்கொள்வதற்கும் அது தயாராயிற்று!

1970 தேர்தலுக்குப் பிறகு நிலைமை மோசமாகி--கிழக்கு வங்க மக்கள் மீது பாகிஸ்தான் இராணுவம் ஏவிவிடப்பட்டபோது--தெற்குச் சீனாவில் தங்கள் நிலைமையைப் பலப்படுத்திக்கொள்வதற்கான தருணம் வந்துவிட்டதாகச் சீனத் தலைவர்கள் கருதினர்; இந்த நோக்கத்துடன், பதில் கெடுபிடிகளில் இறங்குமாறு சீனாவை அவர்கள் ஊக்குவித்தனர்.

அடக்குமுறை நின்று அரசியல் தீர்வு காணுமாறு வற்புறுத்திய இரஷ்யாவுக்குப் பீகிங் தலைவர்கள் கெட்ட எண்ணம் கற்பித்தனர்; அகதிகள் திரும்புவதற்கு இசைவான அரசியல் தீர்வை வற்புறுத்திய இந்தியாவை அவர்கள் அவதூறு கூறினர்; பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா குறுக்கிடுவதாக ஏப்ரல் 12-ந் தேதி யாகியா கானுக்கு அனுப்பிய செய்தியில் சீனத் தலைமையமைச்சர் சூ-என்-லாய் கூறினர்.

இந்தியாமீது போருக்குத் தயார் செய்யும் வகையில் பாகிஸ்தானுக்கு சீனா தன் உதவியை அதிகப்படுத்தியது; மே மாதத் தொடக்கத்தில் ஒரு பாகிஸ்தான் இராணுவ தூதுக் குழு பீகிங்குக்குச் சென்றது! ஜூன் மாதத்தில் இரண்டு டிவிஷன்களுக்கு வேண்டிய ஆயுதங்களையும்--தோட்டாக்களையும் பாகிஸ்தானுக்குச் சீனா அனுப்பிவைத்தது; கிழக்குப் பாகிஸ்தானில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக போர்ச் சாதனத் தயாரிப்புத் தொழிற்சாலையைப் பாகிஸ்தானில் சீனா அமைத்துக் கொடுத்தது! இது கடனுதவியாகக் கிடைத்தது.

நவம்பரில் ஒரு பாகிஸ்தான் தூதுக் குழு பீகிங் வந்தது! அதில் முப்படைகளின் தலைவர்களும் சென்றனர்; வேட்டை விமானங்களும்--குண்டு விமானங்களுமாக 400 சப்ளை செய்ய பீகிங் ஒப்புக்கொண்டது; விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளும்--டாங்கிகளும் அனுப்பப்பட்டன.

'இந்தியாவுடன் 10 நாளில் போர் வரும்' என்று யாகியா கான் அறிவித்தபோது, ஒரு சீனத் தூதுக் குழு இராவல்பிண்டியில் இருந்தது; 10 நாள் வாய்தா டிசம்பர் 3-ந் தேதி முடிந்தது; அன்றையத் தினமே பாகிஸ்தான் விமானங்கள் முழுமூச்சுடன் இந்தியாவின் விமான நிலையங்களைத் தாக்கின.

சீனத் தலைவர்களின் இந்தச் செயலும் -- அமெரிக்காவின் பாகிஸ்தான் ஆதரவுப் போக்கும் போராட்டத்தைத் தவிர்க்க முடியாதவையாக்கிவிட்டன.

அரசியல் தீர்வை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகளுடன் இணைந்த போர் நிறுத்தத்துக்கு இரஷ்யா ஐ நா. கவுன்சிலில் பாடுபட்டது; அதற்கு சீனா முட்டுக்கட்டை போட்டது; இந்தப் பாணியில், அமெரிக்கரும் -- சீனரும் தோளோடு தோளாக நின்றனர்!

இந்தியாவை அமெரிக்காவும் -- சீனாவும் நிர்ப்பந்திக்க முற்பட்ட தருணம் கவனிக்கத்தக்கது; வங்காள விரிகுடாவுக்கு அமெரிக்கா தன் கடற்படையை அனுப்பிவிட்ட தருணம்; இமாலயப் பகுதியில் தன் எல்லையை மீறியதாகச் சீனா, இந்தியாமீது குற்றஞ்சாட்டிய தருணம் அது!

பீரங்கிகள் முழங்கிக் கொண்டிருக்கையில் -- சமாதானத்தை உருவாக்குபவர்கள் போல நடித்த -- அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும், பீகிங் தலைவர்களும், 'போர் நிற்க வேண்டும்' என்று கேட்டனர்; போர் இப்பொழுது நின்றுவிட்டது; இப்பொழுது போரைத் தொடர்ந்து வெற்றி காணும் வரை நடத்தும்படி பீகிங் அன்றாடம் பாகிஸ்தான் தலைவர்களுக்குத் தூபம் போட்டு வருகிறது!

வல்லரசுகளின் விஷமத்தனம் --- உரிய நேரத்தில் இந்தியா உணர்ந்தது

உண்மை நிலையை உணராததாலேயே பாகிஸ்தான் தோல்வியைத் தழுவியது

தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெளிவுரை

ஸ்ரீநகர் டிச. 30—

"இந்தியா – பாகிஸ்தான் பிரச்சினைகளுக்குச் சில வெளிநாட்டு வல்லரசுகளே காரணமாகும்; இந்தியாவும் – பாகிஸ்தானும் சமாதானமாக வாழ்வதை இந்த வல்லரசுகள் விரும்பவில்லை! இரு நாடுகளும் எப்போதும் மோதிக்கொண்டிருக்க வேண்டுமென்றே அவை விரும்புகின்றன! இந்த விஷமத்தனத்தை, இந்தியா உரிய நேரத்தில் உணர்ந்துவிட்டது; ஆனால், இந்தியாவைப்போல் சுதந்தரத்திற்காகப் போராட்டம் நடத்திப் பழக்கப்படாத பாகிஸ்தான் இதை உணரத் தவறிவிட்டது.

"போரை ஒருபோதும் இந்தியா தொடங்கியதில்லை; நம்முடைய விமானத் தளங்களைப் பாகிஸ்தான் கண்மூடித்தனமாகத் தாக்கியபோது அதற்கு நாம் சரியான பதிலடி மட்டுமே கொடுத்தோம் -- அவ்வளவுதான்.

"ஆயுதங்களினால் மட்டும் இந்தப் போரில் இந்தியா வெற்றி பெறவில்லை; எந்தக் கொள்கையுடன் போர் நடத்தப்பட்டதோ அந்தக் கொள்கையினாலும் நாம் வெற்றி பெற்றோம்; பாகிஸ்தான் போர் வீரர்களிடம் ஆயுதங்கள் இருந்தன -- அவர்களிடம் வீரமும் இருந்தது; ஆனால் எதற்காகப் போராடுகிறோம் என்பது தெரியாமலே அவர்கள் போராடினார்கள்; இதனால்தான் அவர்கள் தோல்வியைத் தழுவ நேரிட்டது; பாகிஸ்தான் தலைவர்களும் உண்மையிலிருந்து நெடுந்தூரம் விலகிச் சென்றுவிட்டனர்"

--என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினார்; 'இந்தியாவைப் பலவீனப்படுத்த எந்த நாடேனும் முயற்சி செய்தால், இந்தியா அதைச் சகித்துக் கொண்டிருக்காது' என்று அறிவித்தார்.

"நமது அண்டை நாடு பலவீனமாக இருக்க வேண்டுமென்று நாம் விரும்பவில்லை; ஆனால், பாகிஸ்தானோ அல்லது அதன் நண்பர்களோ நம்மை எந்த விதத்திலாவது பலவீனப்படுத்த முயற்சித்தால் அதை நாம் சகித்துக்கொண்டிருக்க மாட்டோம்" என்று அறிவித்தார்.

"இந்தியாவுடன் நட்புறவுகொள்ளுவது பாகிஸ்தானின் நலனுக்கு உரிய ஒரு வழி என்பதைப் பாகிஸ்தான் தலைமையினர் இப்போது உணருவார்கள் என்று நம்புகிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"காஷ்மீர் முனைமுதல் கன்னியாகுமரி முனைவரையில் இந்தியா முழுவதும் ஐக்கியமாக உள்ளது; எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்தாலும் -- எந்த நாட்டின் [illegible] றுத்தலுக்கும் இந்தியா பணிந்துவிடாது" என்று சுட்டி[illegible]னார்.

"இந்தியா எவரையும் அச்சுறுத்த விரும்பவில்லை; இந்திய மக்கள் வலிமையானவர்கள்; உயர்ந்த நோக்கங்கள் கொண்டவர்கள்; இந்திய மக்களின் பணி நியாயமானது! எனவே, எந்த நாட்டையும் அச்சுறுத்த நாம் விரும்பவில்லை" என்றும் அவர் உறுதி தெரிவித்தார்.

நாட்டைப் பாதுகாக்க இன்னுயிரை இழந்தனர்

நாட்டின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக பல இந்திய வீரர்கள் தமது இன்னுயிரை இழந்தார்கள்; இந்தியாவைச் சுதந்தர நாடாக வைத்திருப்பதற்கும் -- வேறு சில கொள்கைகளுக்காகவும் அவர்கள் போராடினர்.

படுகொலை செய்தனர்

கிழக்கு வங்காளத்தில் வாழும் முஸ்லிம்கள் சுதந்தரமாக -- சனநாயக வழிமுறையில் வாழ விரும்பினர்கள்; அவர்களை மேற்கு பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியினர் படுகொலை செய்தார்கள்.

தங்களுடைய சொந்த மதத்தைச் சேர்ந்த வங்காளியர்களைக் கொன்று குவிக்குமாறு மேற்குப் பாகிஸ்தான் துருப்புகளுக்குக் கூறப்பட்டது.

கொடுமைக்கு எதிராக எந்த நாடு குரலெழுப்பியது?

சரணடையவிருந்த நேரத்தில் 200 அறிஞர்களை மேற்குப் பாகிஸ்தான் துருப்புகள் சுட்டுக் கொன்றன; இந்தப் படுகொலை பற்றி எந்த நாடும் குரல் எழுப்பவில்லை.

இந்திய இராணுவ வீரர்களிருந்த இடத்தில் இத்தகைய சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்பதையும் அனைத்து நாடுகளும் உணருவது அவசியம்.

பிற நாடுகள் போக்கு-- இந்தியா கவலைப்படாது

இந்தியா பற்றி சில நாடுகளின் போக்குபற்றி வருந்தவேண்டிய நிலையில் இருக்கிறது. சில பெரிய வல்லரசுகள் இப்போது கலக்கமடைந்துள்ளன என்றால் அதுபற்றி நாம் கவலைப்படவில்லை.

மதச்சார்பின்மை -- சோஷலிசம் ஆகிய இலட்சியங்களையும் நமது சுதந்தரத்தையும் நிலைநிறுத்தி வைத்துக்கொள்வதற்காக நாம் போராடினோம்.

மிரட்டல்கள் --எந்தவிதப் பயனையும் ஏற்படுத்தாது

நம்முடைய உள்நாட்டு விவகாரங்களில் அந்நியத் தலையீடு எதையும் இந்தியா அனுமதிக்காது.

'அந்நிய உதவி நிறுத்தப்படும்' என்ற மிரட்டல்கள், இந்நாட்டில் எந்தவிதப் பயனையும் ஏற்படுத்தாது.

சமாதானம் நிலவுகிறதா?

இப்போது எல்லையில் காணப்படும் ஓய்வு நிரந்தரமானதா அல்லது நாட்டுக்கு இடைக்கால ஓய்வா என்பது தெரியவில்லையாதலால், எந்த நிலைமையையும் சமாளிக்க மக்கள் தயாராக இருக்கவேண்டும்.

இப்போது போர் முடிந்துள்ளது; ஆனால் சமாதானம் நிலைத்துவிட்டதா என்பது தெரியாது; மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

குருட்டுத்தனமாகப் பின்பற்ற மாட்டோம்

தலைமையமைச்சர் இந்திரா காந்தி கலந்துகொண்ட கூட்டங்களில் கூறிய கருத்துக்களின் சுருக்கம் வருமாறு:—

"இந்தியா அமைதியையே விரும்புகிறது; ஆனாலும், அதன்மீது தாக்குதல் நடைபெற்றால், தன் பலமெல்லாம் கொண்டு அது எதிர்த்துத் தாக்கும்.

"இந்தியா குருட்டுத்தனமாக மற்றவர்களைப் பின்பற்றாது; இந்தியர்கள் தங்களுடைய முன்னோர்கள் வகுத்த உயர்ந்த கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு புதிய சமுதாயத்தை அமைக்கும் முயற்சியில் ஓயமாட்டார்கள்!

"போர் அபாயம் இன்னும் நீங்கவில்லை; சிறிது காலப்பாற அபாயம் இருப்பது போல் தோன்றுகிறது; நாம் அஞ்சமாட்டோம் -- முன்னைத்த சாலைப் பின்னைக்காமல் முன்னேறுவோம்!

"இந்தியாவின் சுதந்தரத்துக்கு யாரும் அபாயம் விளைவிக்க இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது!"

இந்தியாவின் குறிக்கோளும் பாகிஸ்தான் போக்கும்

"அந்நிய ஆட்சியின் காரணமாக இந்தியா பல ஆண்டுகளாக ஏழை நாடாக இருந்துவந்திருக்கிறது; விரைவில் இந்த ஏழ்மையை அகற்ற நாம் முழுமனதுடன் முயன்றுகொண்டிருக்கிறோம்; ஆனால் பாகிஸ்தான் எப்போதும் இந்தியாமீது போரைத் திணிக்க முயற்சிக்கிறது.

தரணியே வியக்குதம்மா!

[நெ. அ. பூபதி]

எலிகண்டு பூனைதான் ஓடும் என்றால்
இப்புவியில் நகைக்காமல் இருப்பார் உண்டோ
புலிதன்னை வெள்ளாடு எதிர்க்கும் என்றால்
புத்திஇல்லை என்றுதானே நினைக்கக் கூடும்
புல்தடுக்கி பயில்வானும் விழுந்த துண்டோ
புரியாமல் யாயாகான் போர் தொடுத்து
மலைநடுங்க படைநடுங்க ஓட்டம் கண்டு
பாரதத்தின் பெருமைதனை ஓங்கச் செய்தான்

நாய்குரைத்து மலையென்றும் நகர்ந்த தில்லை
நமைப்பார்த்துக் குரைக்கின்றான் பூட்டோ என்பான்
வாய்வீச்சு வாள்வீச்சை வென்ற துண்டோ!
வான்மழையை வெறுங்கையால் தடுத்தல் ஆமோ
தாய்நாட்டைக் காக்கும்நம் வீரர் முன்னே
தாள்பணிந்து வணங்கிட்ட காட்சிக் கண்டும்
வாய்மட்டும் ஓயாமல் உளறு கின்றான்
வாழ்வதற்கு விருப்பந்தான் இல்லை மோலும்

தாய்நாட்டைத் தாக்கிட்ட எதிரி தம்மை
தயங்காமல் தடுத்திடவே ஆணை யிட்டாய்
வாய்வீரம் பேசிட்ட யாகியா கான்
வாய்கிழிய ஏசிட்ட பூட்டோ நாண
தாய்நாட்டைக் காக்கின்ற நமது வீரர்
தாள்பணியச் செய்திட்டார் பகைவர் தம்மை
தாய்க்குலமே தலைநிமிர்ந்து நடக்கு தம்மா
தரணியே உனைக்கண்டு வியக்கு தம்மா!

மதவேற்றுமை பாரோம்

அழிக்கப்பட்ட ஆலயங்கள் அனைத்தையும் கட்டிக்கொடுப்போம்

வங்க தேசத் தலைமையமைச்சர் தரும் உறுதி

டாக்கா, டிச. 28—

"பாகிஸ்தான் இராணுவத்தால் அழிக்கப்பட்ட கோவில்கள் -- மசூதிகள் -- மாதா கோவில்கள் அனைத்தையும் மீண்டும் கட்டிக் கொடுப்போம்"

என்று, வங்க தேசத் தலைமை அமைச்சர் தாஜுதீன் அகமது உறுதிமொழி வழங்கியுள்ளார்.

செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"வங்க தேச அரசு, மதம் காரணமாக எவருக்கும் பாரபட்சம் காட்டாது."

போரின்போது டாக்காவிலும், வங்காள தேசத்தின் மற்றப் பகுதிகளிலும் ஏராளமான கோவில்களையும் மசூதிகளையும் பாகிஸ்தான் இராணுவத்தினர் அழித்திருக்கின்றனர்; இராம்னாவில் உள்ள புகழ்பெற்ற காளி கோவில் உட்பட பல கோவில்கள் அழிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தொண்டாமுத்தூரில் சர்க்கரை ஆலை

கோவை, டிச. 30—

"கோவை மாவட்டம் தொண்டாமுத்தூரில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது"

என்று, தமிழகத் தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் அறிவித்தார்.

வீரப் போர் புரிந்து களத்திலே மாண்டோர் பட்டியல்

மேலும் இரு தமிழ் மறவர்கள் பற்றிய செய்தி

கல்கத்தா, டிச. 29—

இந்திய இராணுவத்தில் சென்னைப் பட்டாளத்தைச் சேர்ந்த லான்ஸ் நாயிக் சின்னத்தம்பி 'தாய்நாட்டுக்காக உயிர் நீத்த துணிச்சல் மிக்க வீரர்களில் ஒருவர்' என்ற புகழைப் பெறுவார்.

சின்னத்தம்பி, நாலாவது சென்னைப் பட்டாளத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்; தினாஜ்பூருக்கு 10 கிலோமீட்டர் மேற்கேயுள்ள கௌரிபூர் கால்வாய் பாலத்தைப் பிடிக்கும்படி அந்தப் பிரிவுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது; அந்தப் பாலத்துக்குப் பலமாகப் பாதுகாப்புச் செய்யப்பட்டிருந்தது; இந்தியத் துருப்புகள் பாலத்தை நெருங்கிய போது, பாதுகாப்புக் குழிகளிலிருந்து பாகிஸ்தான் துருப்புகள் சுட்டன.

சின்னத்தம்பி குண்டுகளுக்கு அஞ்சாமல் துணிச்சலுடன் பாய்ந்து சென்று எதிரி நிலைகளைப் பிடித்துவிட்டார்; எதிரியின் துப்பாக்கிகள் ஓய்ந்தன; இதனால் அவருடைய சகாக்கள் முன்னேற முடிந்தது.

ஆனால் நமது வீரர்கள் அவருக்கு அருகில் சென்று அவருடைய வீரத்தைப் பாராட்டுமுன், பின்னாலிருந்து எதிரி ஒருவன் சுட்டுவிட்டான்; சின்னத்தம்பி பிணமாகிவிட்டார்.

மற்றொரு வீரத் தியாகி

தினாஜ்பூரிலுள்ள 'கான் ஹாத்' என்னுமிடத்தை நம் துருப்புகள் பிடிப்பதற்காக நடந்த சண்டையில், நாயிக் சுபேதார் பி. ஓ. செரியன் இதே மாதிரி வீர மரணம் எய்தினார்.

செரியன் தனியாக இருந்தார்; ஐந்து பாகிஸ்தானிகளை அவர் சமாளிக்க வேண்டியிருந்தது; அவர்கள் சிறிய இயந்திரத் துப்பாக்கிகள் வைத்திருந்தனர்; செரியன் இருட்டில் எதிரிகளின் பின்பக்கமாக நகர்ந்து சென்று -- அவர்களில் மூவரைக் கொன்றுவிட்டார்; எஞ்சிய இருவரும் ஓடிவிட்டனர்.

எதிரிகள் மடமடவென்று சுட்டதில், செரியன் உடலில் எட்டு குண்டுகள் பாய்ந்தன; அவர் அந்த இடத்திலேயே உயிர் நீத்தார்.

வீரன் செல்வராசன்

டிச. 17-ந் தேதி ஜலாலாபாத் பகுதியில் -- எதிரியின் காவல் நிலையத்தைத் தாக்கிய இந்தியப் பட்டாளப் பிரிவைச் சேர்ந்த வீரர் ஒருவர் காட்டிய துணிச்சல் மகத்தானது; அந்த வீரரின் பெயர் செல்வராசன்.

பாகிஸ்தானிகள் பக்கத்தில் ஒரு பாதுகாப்புக் குழியிலிருந்து இடைவிடாது சுட்டுக் கொண்டிருந்ததால் நம் படைகள் முன்னேற முடியவில்லை; செல்வராசன் மிகத் துணிச்சலான ஒரு முடிவுக்கு வந்தார்; தரையில் படுத்து அந்தப் பாதுகாப்புக் குழியை நோக்கித் தவழ்ந்து சென்றார்; எதிரிகள் பார்த்துவிட்டனர்; உடனே அவரை நோக்கிக் குண்டுகளைப் பொழிந்தனர்; இதை செல்வராசு இலட்சியம் செய்யவில்லை; அவர்கள் சுட ஆரம்பித்ததும், இவர் எழுந்து தன்னிடமுள்ள துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே முன்னேறி ஓடினார்; அவர் அந்தப் பாதுகாப்புக் குழியை நெருங்கியபோது கால்களில் காயமடைந்துவிட்டார்; எதிரிகள் அவரை நோக்கி இரண்டு கைக் குண்டுகளை வீசினர்.

செல்வராசன் கலங்கவில்லை; கீழே கிடந்த தனது சிறு இயந்திரத் துப்பாக்கியை எடுத்தார்; பாதுகாப்புக் குழியிலிருந்த பாகிஸ்தானிகளை நோக்கிச் சுட்டு அவர்களைக் கொன்றுவிட்டார்; இதனால் நமது துருப்புகள் முன்னேறி -- எதிரி நிலையைப் பிடிக்க முனைந்தது.

உண்மை நிலையை உணருவீர்

அமெரிக்க--சீனத் தலைவர்கட்கு வேண்டுகோள்

'உலகில் நாகரிகம் உள்ளவரையில் வங்க தேசம் இருக்கும்' என நஸ்ருல் இஸ்லாம் உறுதி

டாக்கா, டிச. 30

வங்க தேசம் தோன்றியுள்ள உண்மை நிலையை ஏற்குமாறு அமெரிக்க அதிபர் நிக்சனையும், சீனத் தலைமையமைச்சர் சூ-யென்-லாயையும் வங்க தேச தற்காலிகக் குடியரசுத் தலைவர் சையத் நஸ்ருல் இஸ்லாம் இன்று வற்புறுத்தினார்.

"இந்த உலகத்தில் நாகரிகம் இருக்கும்வரை வங்க தேசமும் இருந்துவரும்" என்றார்.

நிருபர்கள் கூட்டத்தில் அவர் பேசுகையில், வங்க தேச விடுதலைப் போராட்டத்தின்போது அமெரிக்க அரசும் -- சீன அரசும் நடந்துகொண்டவிதம் குறித்து ஏமாற்றம் தெரிவித்தார்.

"இரு நாட்டு அரசுகளும் தங்களது நிலையை மாற்றிக்கொண்டு --வங்க தேசத்துடன் உறவு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்" என்று அவர் வற்புறுத்தினார்.

இவ்விரு அரசுகளின் நிலை எவ்வாறு இருந்தபோதிலும் சரி — இந்நாடுகளுடன் நட்புறவு ஏற்படும் வாய்ப்பை அவர் நிராகரிக்கவில்லை.

அமெரிக்காவில் மக்களும் -- பத்திரிகைகளும் தெரிவித்த அனுதாபத்தையும், ஆதரவையும் இஸ்லாம் பாராட்டினார்.

வங்க தேசப் போராட்டத்துக்கு ஆதரவு காட்டியதற்காக அமெரிக்க செனட் உறுப்பினர் சாக்ஸ்பி போன்ற தலைவர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

நிருபர்கள் கூட்டத்தில் தலைமையமைச்சர் தாசுதீன் அகமதும்-- அவரது 7 அமைச்சர்களும் உடனிருந்தனர்.

இந்தியா அளித்த தார்மீக ஆதரவையும் --- இதர உதவிகளையும், இரஷ்யா காட்டிய ஆதரவையும் இஸ்லாம் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டார்; 'இரஷ்யாவுடன் தங்களது நட்பு நிரந்தரமானது' என்றும் அவர் சொன்னார்.

"சனநாயகம் -- மனிதாபிமானம் -- மத சார்பற்ற தன்மை ஆகியவற்றைக் காப்பாற்றுவதே இந்தியா உதவியளித்ததன் நோக்கமாகும்" என்றார்.

வங்க தேச விடுதலைப் போர் சம்பந்தமாகப் பிரிட்டனும், பிரான்சும் நடுநிலைப் போக்கை மேற்கொண்டதையும் அவர் குறிப்பிட்டார்; 'இவ்விரு நாடுகளின் நட்புறவு அடையாளத்தை வங்க தேச மக்கள் பெரிதும் வரவேற்பர்' என்றார்.

"கூட்டுச் சேராமை -- சகவாழ்வு -- இதர நாட்டு உள்விவகாரங்களில் தலையிடாமை ஆகியவை வங்க தேசத்தின் வெளிவிவகாரக் கொள்கையாக இருக்கும்" என்று இஸ்லாம் உறுதி செய்தார்.

இக்கொள்கை, வங்க பந்து ஷேக் முஜிபுர் ரகிமானால் உருவாக்கப்பட்டது என்றும், அவாமி லீகின் தேர்தல் அறிக்கையில் இக்கொள்கையைக் குறிப்பிட்டதாகவும் அவர் தெரிவித்தார்; 'இக்கொள்கையிலிருந்து விலகிச் செல்லப் போவதில்லை' என்று அவர் குறிப்பிட்டார்.

"டாக்காவில் தற்போதுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் அதிகாரிகள் -- ஊழியர்கள் ஆகியோருக்கு -- அவர்கள் டாக்காவில் தங்கியிருக்கும் வரை -- முழுப் பாதுகாப்பு அளிக்கப்படும்; ஆனால், அவர்களது நாடுகள் சட்டபூர்வமாக வங்க தேசத்தை அங்கீகரிக்கவில்லை என்றால், அவர்கள் இங்கு இராசதந்திர அலுவல்களை மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்" என்றும் இஸ்லாம் கூறினார்.

"வங்க தேசத்தை அங்கீகரிக்கும் தங்கள் விருப்பத்தைச் சில நாடுகள் தெரிவித்து உள்ளனவா?" என்று கேட்டதற்கு, 'பொறுத்திருந்து பாருங்கள்; உங்களுடன் நாங்களும் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்வோம்' என்று தாசுதீன் அகமது பதிலளித்தார்.

அமெரிக்க செல்வாக்கின் அஸ்தமனம்

சீன ஏடுகள் வர்ணனை

பீகிங், டிச. 29—

'கடந்த சில நாட்களாக சீனப் பத்திரிகைகள் அமெரிக்காவை மீண்டும் கடுமையாகத் தாக்கத் தொடங்கியிருக்கின்றன.

'அமெரிக்க டாலர் நெருக்கடி -- அதன் இரு சீனக் கொள்கையின் தோல்வி ஆகியவை உலக அரசியலில் அமெரிக்கச் செல்வாக்கின் அஸ்தமனத்தைக் குறிக்கின்றன"

என்று பல தலையங்க எழுத்தாளர்கள் கூறியிருக்கிறார்கள்.

வட வியட்நாமில் அமெரிக்காவின் தற்போதைய குண்டுவீச்சை சீனா அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை; ஹனாயின் ஆட்சேபங்களை மட்டுமே சீனப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன.

"வட வியட்நாமும் தக்க பதிலடி கொடுக்கும்" என்று பீகிங் 'பீபிள்ஸ் டெயிலி' ஒரு குட்டித் தலையங்கம் எழுதியிருக்கிறது.

கிழக்கு வங்காள கவர்னர் மாலிக்

வங்க தேச அரசிடம் ஒப்படைக்கப்படுவது உறுதி

ஜெனீவா, டிச. 29—

"முன்னாள் கவர்னர் டாக்டர் ஏ. எம். மாலிக் உட்பட முந்தைய கிழக்குப் பாகிஸ்தான் அதிகாரிகளை வங்க தேச அரசிடம் இந்தியா ஒப்படைப்பதை சர்வதேச செஞ்சிலுவைக் குழு தடுக்க முடியாது"

என்று அக்குழுவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறினார்.

டாக்காவில் சண்டையின்போது மாலிக்கும் -- இதர பாகிஸ்தான் அதிகாரிகளும், நடுநிலை பகுதியாக இருந்த சர்வதேச ஓட்டலில் தஞ்சமடைந்தது நினைவிருக்கலாம்.

கிழக்கு வங்கத்தில் சண்டை நின்றதும் அங்குள்ள செஞ்சிலுவைச் சங்கம் பாகிஸ்தான் அதிகாரிகளை இந்தியத் துருப்புக்களிடம் ஒப்படைத்ததாகவும், ஏனெனில், இந்தியா ஜெனீவா ஒப்பந்தத்தைச் சேர்ந்த நாடு என்றும் அதிகாரி தெரிவித்தார்.

"ஜெனீவா ஒப்பந்தத்துக்கு ஏற்ப சர்வதேச செஞ்சிலுவைக் குழு, பாகிஸ்தான் அதிகாரிகளும் -- காயமடைந்தவர்களும் -- போர்க் கைதிகளும் -- மைனாரிட்டியினரும் நன்கு நடத்தப்படுமாறு கவனித்துக் கொள்ளும்" என்று அவர் சொன்னார்.

பாகிஸ்தான் இராணுவத்திடம் சிக்கிய 51 இளம் பெண்கள் மீட்பு

டாக்கா, டிச. 29—

வங்க தேசத்தில் நாராயணகஞ்சிலும் டாக்கா கண்டோன்மென்டிலும் கடந்த சில நாட்களில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் இந்தியப்

(4-ம் பக்கம் பார்க்க)

போர் வீரர்களுக்குத் தமிழகம் வழங்கும் பொருள்

ஆறு டிரக்குகள் நிறைய அடுக்கிவைக்கப்பட்டிருந்தன

கலைவாணர் அரங்கில் நடந்த விழாவில் முதலமைச்சர் கலைஞர் ஏற்றார்

சென்னை, டிச. 30—

போர் முனையில் உள்ள போர் வீரர்களின் பயனுக்கென ரூ. 3.08 இலட்சம் மதிப்புள்ள பரிசுப் பொருள்கள் -- தமிழகத்தின் சார்பில் -- நேற்று புதுடில்லிக்கு இரயில்மூலம் அனுப்பிவைக்கப் பட்டது.

இந்தப் பரிசுப் பொருட்கள் ஆறு டிரக்குகளில் நிரப்பப்பட்டு நேற்று காலை கலைவாணர் அரங்கில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன; பொருட்களின் விவரம் வருமாறு :—

303 டிரான்சிஸ்டர் ரேடியோக்கள்; 3 052 போர்வைகள்; 2,800 லுங்கிகள், வேட்டிகள், ஓவல்டின், ஹார்லிக்ஸ், போர்ன் விட்டா முதலியவை 3,710; 7,824 டவல்கள், 2 948 கைக்குட்டைகள், செஸ், கேரம் முதலிய விளையாட்டுச் சாமான்கள் 647; கிராமபோன் -- இசைத் தட்டுக்கள் 5,000; சிகரெட் பாக்கெட்டுகள் 3,991; 4,825 கிலோ எடையுள்ள 1,00,100 பீடிகள்; 198 டின் பிஸ்கட்டுகள்; 1,300 பிஸ்கட்டு பாக்கெட்டுகள்; 60 டின் இனிப்புகள்; 225 இனிப்புப் பாக்கெட்டுகள்; 1,291 பாக்கெட் டாய்லெட் சாமான்கள்; 295 கம்பளி ஸ்வெட்டர்கள்; 718 மப்ளர்கள்; 1,883 பனியன்கள்.

இந்தப் பரிசுப் பொருட்களை சென்னையில் உள்ள போர் வீரர்களுக்குப் பொருள்கள் திரட்டும் குழுவினர் திரட்டினர்; இரயில் மூலம் டில்லிக்கு அனுப்பப்படும் இப்பொருட்கள், தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடம் நாளை, தமிழகத்தின் சார்பில் முதல் தவணையாக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அளிப்பார்.

நேற்று காலை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழா ஒன்றில், முதலமைச்சர், போர் வீரர்களுக்குப் பொருள்கள் திரட்டும் குழுவிடமிருந்து மேற்கண்ட பொருட்களை பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவுக்கு திருமதி மதுபென்ஷா தலைமை வகித்தார்; 'போர் வீரர்களின் குடும்பங்களைக் காப்பாற்ற நாங்கள் இருக்கிறோம்' என்ற நம்பிக்கையை, போர் முனையில் இருப்பவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார்.

போர் வீரர் வசதிக் குழுவின் தலைவர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள், முதலமைச்சரிடம் பரிசுப் பொருட்களை வழங்கினார்.

இங்கிலீஷ் எலெக்ட்ரிகல் கம்பெனி இயக்குநரும் பொது நிர்வாகியுமான ஜே. பிரவுன், போர் வீரர்களின் குடும்பங்கட்கு உதவ அந்நிறுவனத்தின் சார்பில் ரூ. 1,00,001-க்கான 'செக்'கை முதலமைச்சரிடம் வழங்கினார்.

திருமதி பிரவுன், 101 டிரான்சிஸ்டர் ரேடியோக்களை அளித்தார்.

இங்கிலீஷ் எலெக்ட்ரிக் கம்பெனி தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் -- அதன் செயலாளர், ரூ. 20,000-த்தைப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கினார்.

மேலும் பல நிறுவனங்களின் சார்பில் பரிசுப் பொருட்களையும் -- பாதுகாப்பு நிதியையும் பெற்றுக் கொண்டு பேசிய முதலமைச்சர் போர் வீரர்களுக்கு உதவுவதிலும் -- போர் நிதிக்கு உதவுவதிலும் தமிழக மக்கள் காட்டுகின்ற உற்சாகத்தைப் பாராட்டினார்.

"மக்களின் இந்த உற்சாகத்தைப் பார்த்தால், முதல் தவணையாகத் திரட்டப்படும் ரூ. 10 கோடி மிக விரைவிலேயே சேர்ந்துவிடும் என்று கருதுகிறேன்" எனக் குறிப்பிட்டார்.

சென்ற 26-ம்தேதியன்று மட்டும் பாதுகாப்பு நிதி ரூ. 1 கோடிக்கு மேல் வசூலாகிவிட்டது என்றும், இந்த விழாவில் கலந்துகொள்ள வருவதற்கு முன்னதாக தமது இல்லத்தில் பாதுகாப்பு நிதிக்கு ரூ. 4-இலட்சம் வசூலாகியது என்றும் அவர் கூறினார்.

"இராணுவ வீரர்கள் 10 இலட்சம் பேர்களில் ஒர் இலட்சம் பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதில் தமிழ்நாடு பெருமைகொள்ள முடியும்" என்றும் அவர் சொன்னார்.

தமிழ்நாடு — மைசூர் — கேரள வட்டார இராணுவத் தளபதி மேஜர்--ஜெனரல் கே. ஏ. எஸ். இராஜா பேசுகையில், போர் வீரர்களுக்கு உதவுவதில் மக்கள் காட்டும் உற்சாகத்தைப் பாராட்டினார்; 'இங்கிருந்து அனுப்பப்படும் பரிசுப் பொருள்கள் முன்னணிப் பகுதியில் உள்ள படை வீரர்களுக்கு வழங்கப்படும்' என்று தெரிவித்தார்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் எம்.எல்.ஏ. பேசுகையில், 'நாட்டின் பாதுகாப்புக்குப் பொருள்களும்--குருதிக்கொடையும் வழங்க மக்கள் தயாராக இருக்க வேண்டும்' என்றார்.

"பள்ளிகள், கல்லூரிகளில் சேருவதற்கு போர் வீரர் குழந்தைகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.

சமூக நலத்துறை செயலாளர் எம். எம். இராசேந்திரன் நன்றி கூறினார்.

போர் வீரர் வசதிக் குழு--- சத்தியவாணிமுத்து தகவல்

"போர் வீரர் வசதிக் குழு நான்கு துணைக் குழுக்களாகப் பிரிந்து செயல்பட்டு வருகின்றன; ஒன்று -- போர் வீரர்கள் பயன்படுத்தத்தக்க பொருள்களைத் திரட்டுகிறது; இக்குழு, முதலமைச்சர் துணைவியார் திருமதி தயாளு கருணாநிதி தலைமையிலும், இரண்டாவது குழு மருந்துகளைத் திரட்ட நாவலர் மனைவியார் திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் தலைமையிலும் இயங்குகின்றன.

போர்வீரர் வரவேற்புக்கென்று மூன்றாவது துணைக் குழு திருமதி கிளப்வாலா நாதவ் தலைமையில் இயங்குகிறது.

நான்காவது துணைக் குழு பிரிகேடியர் கேசவன் தலைமையில் செயல்படுகிறது; போர் வீரர் குடும்பங்களைப் பராமரிக்கும் பொறுப்பை இந்த நான்காவது குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், தமது வரவேற்புரையில் இந்த விவரங்களைத் தெரிவித்தார்.

பீகாரில் சட்டமன்றம் கலைப்பு

முதல்வர் -- துணை முதல்வர் பதவியில் நீடிப்பு

பாட்னா, டிச. 30—

பீகார் சட்டமன்றத்தை மாநிலக் கவர்னர் டி. கே. பருவா கலைத்து விட்டார்.

போலா பஸ்வான் சாஸ்திரி தலைமையிலிருந்த புதிய காங்கிரசு கூட்டு அமைச்சரவை 27-ந் தேதி தன்னுடைய பதவியிலிருந்து விலகியது.

பதவிவிலகலை கவர்னரிடம் அளித்த முதல்வர், சட்டமன்றத்தைக் கலைத்து விரைவில் தேர்தலை நடத்தும்படி கவர்னருக்குச் சிபாரிசு செய்திருந்தார்.

35 பேர் கொண்ட அமைச்சரவையில், 33 பேர்களின் பதவி விலகலை கவர்னர் ஏற்றுக்கொண்டு -- குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படும் வரையில், முதலமைச்சர் போலா பஸ்வான் சாஸ்திரியும் -- துணை முதலமைச்சர் ராம் ஜய்பால் சிங் யாதவும் உள்ள இரண்டு பேர்கொண்ட அமைச்சரவையை வைத்துக் கொண்டார்.

குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனம் செய்வதில் ஏற்படக் கூடிய தாமதத்தினால் விளையக் கூடிய சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகக் கவர்னர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

19 அமைச்சர்கள் -- 13 துணையமைச்சர்கள் -- 3 உதவியமைச்சர்கள் விலகிய அரசில் இருந்தனர்.

குடியரசுத் தலைவர் ஆட்சியை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சிபாரிசு செய்த பீகார் கவர்னர் அனுப்பியுள்ள அறிக்கையுடன் மத்திய அமைச்சரவையிடமிருந்து ஒரு கடிதம் குடியரசுத் தலைவர் வி. வி. கிரிக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது.

இது தொடர்பாகக் குடியரசுத் தலைவர் உடனடியாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

அரிசி -- கோதுமை இறக்குமதி நிறுத்தம்

நாடு தன்னிறைவு பெற்றதை அடுத்து நடவடிக்கை

சண்டிகார், டிச. 30--

"இனி கோதுமையையும் -- அரிசியையும் இந்தியா இறக்குமதி செய்யாது.

"இப்பொழுது நாடு தன்னிறைவு பெற்றிருப்பதால், மற்ற நாடுகளில் கோதுமை -- அரிசி வாங்க புதிய ஒப்பந்தங்களை இந்திய அரசு செய்து கொள்ளாது; ஆனால், பர்மா -- தாய்லாந்து -- எகிப்து ஆகியவற்றுடன் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருப்பதால் அவற்றிடமிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படும்"

என்று மத்திய உணவு - வேளாண்மை அமைச்சர் ஏ. பி. ஷிண்டே, செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"பி. எல். 480 திட்டத்தின் கீழ் அமெரிக்காவிலிருந்து கோதுமை இறக்குமதி செய்வதை இந்தியா நிறுத்திவிட்டது.

"1[illegible] டிசம்பர் 31-க்குப்பிறகு கோதுமை இறக்குமதி செய்வதில்லை என இந்திய அரசு முடிவு செய்ததையடுத்து பி. எல். 480 திட்டத்தின்கீழ் கோதுமை இறக்குமதியை நிறுத்திவிட்டது.

"சில திங்களுக்குமுன்பு சுமார் 4 இலட்சம் டன் கோதுமை வாங்க அமெரிக்க அரசு அனுமதியளித்தது; ஆனால் நாட்டில் போதிய உற்பத்தி இருப்பதால் கோதுமையை வாங்காதிருக்க இந்திய அரசு முடிவு செய்தது."

பெங்களூர் நகர தி.மு.க. தோழர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை

பெங்களூர் மாநகராட்சியின் கடந்த தேர்தலிலும், கழகக் கட்டுப்பாடு -- ஒழுங்குமுறைகளுக்கு மாறாகவும், கழக வேட்பாளர்களின் வெற்றிக்குப் பாதகமாகவும் செயல்பட்ட கீழ்க்காணும் தோழர்கள்மீது -- மாநில தி. மு. க. அமைப்பின் பரிந்துரைக்கேற்ப -- ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு 8—1—1971 முதல் தலைமைக் கழகத்தால் ஐவரும் தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்டுள்ள ஐவரும் தங்களுடைய கடந்தகாலச் செயல்களுக்குப் பெரிதும் வருந்தி அதற்காகத் தலைமைக் கழகத்திடம் மன்னிப்புக் கோரியதுடன், கழகத்தில் தாங்கள் தொடர்ந்து பணியாற்றும் வகையில் தலைமைக் கழகத்தின் ஒழுங்கு நடவடிக்கையை ரத்து செய்யுமாறு மாநில அமைப்புக் குழுவின் மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

இந்த வேண்டுகோளைத் தலைமைக் கழகம் பரிசீலனை செய்து ஏற்றுக்கொண்டிருப்பதுடன், இனி கீழ்க்காணும் தோழர்கள் ஐவரும 'கழகக் கட்டுப்பாடு -- ஒழுங்குமுறைகளுக்கும், நிர்வாக விதிமுறைகளுக்கும் மாறாகச் செயல்படுதல் கூடாது' என்கின்ற நிபந்தனையோடு இன்று முதல் கழகத்தில் முறைப்படி தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்படுகிறார்கள்.

8-1-71-ஆம் நாளன்று வெளியிடப்பட்டுள்ள தலைமைக் கழக அறிக்கைப்படி, கீழ்க்காணும் தோழர்களைத் தற்காலிகமாக விலக்கிவைத்து எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையும் இதன் மூலம் இன்றுமுதல் ரத்து செய்யப்படுகிறது.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டுள்ள தோழர்கள் :-

1. எஸ். என். நாராயணன் (சிவாஜி ரோடு)
2. வேதகுமார் (கமர்சியல் தெரு)
3. வி. தேவராசன் (சென்ட்ரல் பஜார்)
4. சண்முகசுந்தரம் (இராஜாஜி நகர்)
5. மூர்த்திவாசன் (காக்ஸ் டவுன்)

'அறிவகம்' சென்னை-18
30—12—71

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி.மு.க.

குடியரசுக் கட்சித் தலைவர் மரணம்

புதுடில்லி, டிச. 30—

இந்தியக் குடியரசுக் கட்சியின் தலைவர் கெயிக்வாட், தமது 71-வது வயதில் நேற்று இரவு 7-30 மணிக்கு இங்கு இயற்கை யெய்தினார்.

அவர், டாக்டர் அம்பேத்காருடைய வலது கரம் போன்று இருந்து பல ஆண்டுகள் சேவை செய்தார்.

அவருடைய தலைமையில், நிலமற்றவருக்கு நிலம் விநியோகம் செய்யவேண்டுமென்று 1964-ல் நாடு முழுவதிலும் அறப்போர் நடைபெற்றது.

அம்பேத்கார் தலைமையில் நடைபெற்ற போராட்டங்களில் அவர் பங்கு கொண்டிருக்கிறார்.

1963-லிருந்து 8 ஆண்டுகளாகக் குடியரசுக் கட்சியின் தலைவராக இருந்து வந்தார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து சுற்றுப்பயணம்

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள், சனவரி 3, 4 ஆகிய நாட்களில், மதுரையில் நடைபெறும் மாநில தாழ்த்தப்பட்டோர் நலக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு, 5—1—72 காலை சென்னைவந்து சேருகிறார்.

சமய ஒருமைப்பாட்டு இசையரங்கு

சென்னைத் தமிழ்க் கலைமன்றத்தின் சார்பில், 31—12—71 மாலை 6 மணிக்கு, அண்ணா சாலை— மாவட்ட மத்திய நூலகக் கட்டடத்தில், சமய ஒருமைப்பாட்டு இசையரங்கு நடைபெறும்.

வானொலியில் கலைஞர்

தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், குடும்ப நலத் திட்ட இரு வார நிறைவு விழாவையொட்டி 29—12—71 அன்று சென்னையில் நிகழ்த்திய உரையைச் சென்னை வானொலி நிலையம், நவ. 31-ம் நாள் இரவு 9.15 மணிக்கு ஒலிபரப்பும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செல்லத் தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

தா. கிருட்டினன்

எம் பி. சுற்றுப்பயணம்

சன. 1 : மானாமதுரை— நண்பர்கள் மன்றம் ஆண்டு விழா; 2 : காரைக்குடி—வங்க தேச விடுதலை விழா; 3 : மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்; 4, 5 : திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய நிகழ்ச்சிகள்; 6 : திருநெல்வேலி—இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுக் கூட்டம்; 7 காலை : தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் சுற்றிப் பார்த்தல்; மாலை : தூத்துக்குடித் துறைமுகத் திட்ட அலுவலர் சங்கப் பார்த்தல்; மாலை : தூத்துக்குடித் துறைமுகத் திட்ட அலுவலர் சங்கப் பொதுக்கூட்டம்; 8 : செங்கோட்டை—இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுக்கூட்டம்; 9 : திருப்பத்தூர் —மாதவன் மன்றம் ஆண்டு விழா; 10 : தொண்டி—வங்க தேச விடுதலை விழா; 11, 12 : மானாமதுரை ஊராட்சி ஒன்றிய நிகழ்ச்சிகள்; 13 : பரமக்குடி—வங்க தேச விடுதலை விழா; 14 : தீத்தாம்பேட்டை —பொங்கல் விழா; கால்நடைக் கண்காட்சி; 15 : கொம்புக்காரனேந்தல்--பொங்கல் விழா; 16, 17 : மானாமதுரை—ஊராட்சி மன்றத் தலைவர்கள் பயிற்சி முகாம்.

பாகிஸ்தான் இராணுவத்திடம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் 51 இளம் பெண்களை மீட்டுள்ளனர்.

அப்பெண்களில் பெரும்பாலானவர்கள் 14 வயது முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்கள். அப்பெண்களைப் பாகிஸ்தானிய துருப்புகள் அறைகளுக்குள் தள்ளி வெளிப்பக்கமாகப் பூட்டுகளை கொண்டு பூட்டியிருந்தனர். அறைகளுக்குள்ளேயே அவர்கள் பல நாட்களாகப் பட்டினியால் வாடிக் கொண்டிருந்தனர்.

அப்பெண்கள் பாகிஸ்தான் துருப்புகள் தங்களுக்கு இழைத்த கொடூர செயல்கள் பற்றி கூறியது உள்ளத்தை உருக்குவதாக இருந்தது.

டாக்கா நகரில் மட்டும் 3,000-க்கும் அதிகமான பெண்களைக் காணோம்; சர்வதேச செஞ்சிலுவைச சங்கத்தினர், மீட்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொறுப்பை மேற்கொண்டுள்ளனர்.